بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 26/04/2024 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

## ஹம்ராஅல் அஸத் போர் தொடர்பாக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றின் அம்சங்கள் மற்றும் கண்ணியத்திற்குரிய சஹாபா பெருமக்கள் (ரிஸ்வானுல்லாஹி அலைஹிம் அஜ்மயீன்) உடைய நேசம், நன்றியுணர்வு மற்றும் தியாகங்களின் ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய குறிப்பு

أَشۡهَدُ أَنۡ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحۡدَهٗ لَا شَرِيۡكَ لَهٗ وَأَشۡهَدُ أَنَّ مُحَمَّدًا عَبۡدُهٗ وَرَسُوۡلُهٗ۔ أَمَّا بَعۡدُ فَأَعُوۡذُ بِاللّٰهِ مِنَ الشَّيۡطٰنِ الرَّجِيۡمِ۔

بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰهِ رَبِّ الۡعٰلَمِيۡنَ ﴿۲﴾ اَلرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ﴿۳﴾ مٰلِكِ يَوۡمِ الدِّيۡنِ ﴿۴﴾

إِيَّاكَ نَعۡبُدُ وَإِيَّاكَ نَسۡتَعِيۡنُ ﴿۵﴾ اِهۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِيۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِيۡنَ أَنۡعَمۡتَ عَلَيۡهِمۡ ۙ۬ غَيۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَيۡهِمۡ وَلَا الضَّآلِّيۡنَ ﴿۷﴾

ஹம்ராஅல் அஸத் போருக்கான காரணம் மற்றும் அதன் பின்னணி தொடர்பாக கடந்த குத்பாவில் கூறி வந்தேன். உஹுது போருக்குப் பிறகு எதிரிகள் வழியில் இருந்து திரும்பி மதீனாவின் மீது தாக்குதல் தொடுப்பதற்கான சதித்திட்டம் வகுக்கின்றார்கள் என்கின்ற செய்தி கிடைத்தவுடன், பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை அழைத்தார்கள். அவர்கள் இருவரும் கூறினார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எதிரிகளின் பக்கம் செல்ல வேண்டும். ஏனென்றால் அவர்கள் நம்முடைய குழந்தைகள் மீது தாக்குதல் தொடுத்து விடக்கூடாது. சுபுஹ் தொழுகை தொழுது முடித்ததன் பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் மக்களை அழைக்க சொன்னார்கள். மேலும் ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களிடம் கூறினார்கள்: எதிரிகளுக்கு எதிராக செல்லுங்கள் என்று அறிவிப்பு செய்யுங்கள். மேலும் கடந்த நாளில் உஹுது போரில் எவர்கள் எல்லாம் நம்முடன் கலந்து கொண்டார்களோ அவர்கள் மட்டுமே கலந்து கொள்ள வேண்டும்.

நபி பெருமானார் (ஸல்) அவர்கள் தம்முடைய கொடியை வரவழைத்தார்கள். அதை ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம் கொடுத்தார்கள். வேறு ஓர் இடத்தில், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு வழங்கினார்கள் என்று சொல்லப்பட்டுள்ளது. இந்த தருணத்தில் ஹஸ்ரத் இப்னு உம்மு மக்தூம் (ரலி) அவர்களை நபி பெருமானார் (ஸல்) அவர்கள் மதீனாவில் தம்முடைய பிரதிநிதியாக நியமித்தார்கள்.

வரலாற்று ஆசிரியர்கள் எழுதுகின்றார்கள்: பெருமானார் (ஸல்) அவர்கள் எதிரிகளை பின்தொடர்ந்து புறப்பட்டது மிகவும் அறிவுத்திறன் கொண்ட தீர்மானம் ஆகும். விளக்கத்தில் எழுதப்பட்டுள்ளதாவது, நயவஞ்சகர்களின் பார்வையில் அதிகப்படியான ஆள்பலம் இல்லாமல் செல்வது மிகவும் ஆபத்திற்குரியதாக இருந்தது. ஆனால் பிற்காலத்தின் சூழல்கள் நிரூபிப்பது என்னவென்றால், நபி பெருமானார் (ஸல்) அவர்களின் தீர்மானம் மிகவும் அறிவுத்திறன் கொண்டதாக இருந்தது. இதனால் முஸ்லிம்களுக்கு எண்ணிலடங்கா பயன்கள் கிடைத்தன. இந்த தீர்மானம் ஜிஹாது செய்பவர்களுடைய தன்னம்பிக்கையை மேலும் முன்னேற்றத்தின் பக்கம் கொண்டு சென்றது. மேலும் நயவஞ்சகர்களுடைய உள்ளத்தில் நபி பெருமானார் (ஸல்) அவர்களின் உறுதியான எண்ணம் மற்றும் திட உறுதித்தன்மை

தொடர்பாக அச்சத்தை ஏற்படுத்தியது. மூன்றாவது பக்கம், இஸ்லாமிய படை தங்களை பின் தொடர்ந்து வருகின்றது என்கின்ற செய்தி எதிரிகளுக்கு கிடைத்தது. இதனால் அவர்களின் தன்னம்பிக்கையின் கொழுந்து விட்டு எரியும் நெருப்பு அணைய ஆரம்பித்தது. இந்த சந்தர்ப்பத்தில் நயவஞ்சகர்களின் தலைவனான அப்துல்லாஹ் பின் உபை தானும் உடன் வருவதற்கான அனுமதி கோரினார். ஆனால் பெருமானார் (ஸல்) அவர்கள் மறுத்து விட்டார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்களுடைய அறிவிப்பு வந்ததும், காயமுற்ற சஹாபிகளின் நேசம் மற்றும் பற்று ஆகியவற்றின் நிலை எப்படி இருந்தது என்றால், அவர்கள் தங்களுடைய காயங்களை சரிசெய்தவாறு தங்களுடைய ஆயுதங்களை ஏந்திக் கொண்டு மீண்டும் ஒரு முறை உடனடியாக புறப்பட்டார்கள். ஹஸ்ரத் உஸைத் பின் குஸைர் (ரலி) அவர்களுக்கு ஒன்பது காயங்கள் ஏற்பட்டிருந்தன. அவர்கள் மருந்து தடவ வேண்டும் என்று நினைக்கத்தான் செய்தார்கள்; அதற்குள், அவர்களுடைய காதுகளில் ஓசை கேட்டதும், அவர்கள் காயங்களில் மருந்து தடவுவதற்கு கூட நிற்காமல் புறப்பட்டுச் சென்றார்கள். பனு சலமாவில் இருந்து 40 காயமுற்றவர்கள் புறப்பட்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் இவ்வாறான சூழலிலும் அந்த மக்கள் கட்டளைக்கு கட்டுப்பட்டவாறு புறப்பட்டதை பார்த்து அவர்களுக்காக பாவ மன்னிப்பிற்கான துஆவை செய்தார்கள்.

துஃபைல் பின் நுஃமான் (ரலி) அவர்களுக்கு 13 காயங்களும், கராஷ் பின் சம்ஆ (ரலி) அவர்களுக்கு பத்து காயங்களும். கஅப் பின் மாலிக் (ரலி) அவர்களுக்கு பத்தை விட அதிக காயங்களும், குத்பா பின் ஆமிர் (ரலி) அவர்களுக்கு ஒன்பது காயங்களும் ஏற்பட்டிருந்தன. ஆனால், அவ்வாறு இருந்தும் முஸ்லிம்கள் தங்களுடைய ஆயுதங்களின் பக்கம் ஓடினார்கள். மேலும் தங்களுடைய காயங்களுக்கு மருந்து தடவுவதற்காக நிற்கவில்லை. இறைவன் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் சஹாபிகளின் இந்த நிகரற்ற ஆர்வத்தைத்தான் தன்னுடைய வேதத்தில் பதிவு செய்து, உலகம் உள்ள நாள் வரை இவர்களுடைய இந்த பற்றின் மீது பூமழை பொழிய செய்துள்ளான். இறைவன் கூறுகிறான்:

“தங்களுக்கு காயம் ஏற்பட்டதன் பிறகு(ம்) அல்லாஹ்வினுடையதும், தூதருடையதுமான கட்டளையினை ஏற்றுக் கொண்டவர்களுள், தங்கள் கடமையினை நன்முறையில் நிறைவேற்றியவர்க்கும் இறையச்சத்தை மேற்கொண்டவர்களுக்கும் பெரும் கூலி உண்டு.” (திருக்குர்ஆன் 3: 173)

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) ஆகியோர் இதற்கு தகுதியானவர்களாக இருந்தனர்.

இந்த போரில் ஒரு நற்பேறு பெற்ற பற்றுள்ள சஹாபி ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்துல்லாஹ் (ரலி) அவர்களும் இருந்தார்கள். அவர்கள் தம் தந்தையின் கட்டளைப்படி தம் 9 சகோதரிகளை கவனித்துக் கொள்வதற்காக இருந்து விட்டதன் காரணத்தினால், உஹுது போரில் கலந்து கொள்ளவில்லை. அதன் விளக்கத்தை அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடம் கூறியபோது, அன்பு மற்றும் நேசத்தில் மூழ்கிய இந்த விளக்கத்தை கேட்டு பெருமானார் (ஸல்) அவர்கள் அவர்களுக்கு உடன் செல்வதற்கான அனுமதி வழங்கினார்கள்.

இந்த போரில் பெருமானார் (ஸல்) அவர்கள் எவ்வாறான சூழலில் புறப்பட்டார்கள் என்றால், (அன்னாருடைய) அருளுக்குரிய முகத்தில் காயம் இருந்தது. (அன்னாருடைய) அருளுக்குரிய நெற்றியில் காயம் ஏற்பட்டு இருந்தது. (அன்னாருடைய) அருளுக்குரிய பற்கள் உடைந்து இருந்தன. இரண்டு உதடுகளும்

உட்புறமாக காயப்பட்டிருந்தன. வலது தோள் மற்றும் இரண்டு கால் முட்டிகளும் காயமுற்று இருந்தன.

ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்களின் உடலில் மொத்தம் எழுபதிற்கும் அதிகமான காயங்கள் இருந்தன. ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் என்னுடைய காயங்களை விட பெருமானார் (ஸல்) அவர்களின் காயங்கள் குறித்தே அதிக கவலை கொண்டிருந்தேன். ஓர் அறிவிப்பின் அடிப்படையில் பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் கூறினார்கள்: இனிமேல் குறைஷிகள் நம்முடன் இவ்வாறு ஒருபோதும் நடந்து கொள்ள முடியாது; எதுவரை என்றால், அல்லாஹ் மக்காவை நமது கையால் வெற்றி அடையச் செய்வான். அல்லது ஓர் அறிவிப்பின் அடிப்படையில் இவ்வாறு கூறினார்கள்: நாம் அஸ்வத் கல்லை முத்தமிடுவோம்.

இந்த போரில் இரண்டு அன்சார் சகோதரர்கள் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் சஹல் (ரலி) மற்றும் ஹஸ்ரத் ராஃபி பின் சஹல் (ரலி) ஆகியோரின் கட்டுப்படுதலின் முன்னுதாரணமும் காணக் கிடைக்கின்றது. அவர்கள் காயமுற்ற நிலையில் நடந்து பயணம் மேற்கொண்டார்கள். விவரங்களில் வருகிறது, உஹது போரில் இருந்து திரும்பி வரும் பொழுது இவர்கள் இருவரும் மிகவும் காயமுற்று இருந்தனர். இந்த இரண்டு சகோதரர்களும் ஹம்ராஅல் அஸதில் கலந்து கொள்வது தொடர்பான ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கட்டளையை கேட்டதும் அவர்களில் ஒருவர் மற்றவரிடம் கூறினார்: இறைவன் மீது ஆணையாக: நம்மால் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் போரில் கலந்து கொள்ள முடியவில்லை என்றால் இது மிகப் பெரிய இழப்பாகிவிடும். பிறகு கூறினார்: இறைவன் மீது ஆணையாக! நாம் சவாரி செய்து செல்ல நம்மிடம் எந்த சவாரியும் இல்லை. இந்தப் பணியை எவ்வாறு செய்ய வேண்டும் என்பதும் நமக்கு தெரியவில்லை. ஹஸ்ரத் அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் கூறினார்கள்: என்னுடன் வாருங்கள். நாம் நடந்து செல்லலாம்.

ஹஸ்ரத் ராஃபி (ரலி) அவர்கள் கூறினார்கள்: 'இறைவன் மீது ஆணையாக! காயத்தின் காரணத்தினால் நடப்பதற்கு கூட எனக்கு சக்தி இல்லை.' அவர்களுடைய சகோதரர் கூறினார்: 'வாருங்கள். நாம் மெது மெதுவாக நடந்து ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பக்கம் செல்லலாம்.' ஆகையால் அவர்கள் இருவரும் நடக்க முடியாமல் இருந்தபோதிலும் நடக்க ஆரம்பித்தனர். இவர்கள் இருவரும் காயப்பட்டு இருந்தார்கள். ஆயினும், எவர் சற்று நன்றாக இருந்தாரோ அவர் அதிக காயமுற்றவரை தம்முடைய முதுகில் தூக்கிக் கொள்வார். ஆனால், பெருமானார் (ஸல்) அவர்களை நோக்கி நடந்து கொண்டே இருந்தார்கள். பலவீனத்தின் காரணத்தினால் சில நேரங்களில் அசைய கூட முடியாமல் போய்விடும். எதுவரை என்றால் இஷா தொழுகை நேரத்தில் அவர்கள் இருவரும் பெருமானார் (ஸல்) அவர்களின் அவையில் ஆஜரானார்கள்.

சஹாபிகள் அந்த நேரத்தில் அப்பொழுது கூடாரங்களை அமைத்து விட்டார்கள்; நெருப்பு மூட்டி கொண்டிருந்தார்கள். இவர்கள் இருவரும் பெருமானார் (ஸல்) அவர்கள் முன்பு நிறுத்தப்பட்டார்கள். பெருமானார் (ஸல்) அந்த இருவரிடமும் எந்த விஷயம் உங்களை தடுத்து வைத்திருந்தது என்று கேட்டார்கள். அந்த இருவரும் அதற்கான காரணத்தையும் விளக்கத்தையும் கூறினார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த இருவருக்காகவும் நன்மையை வேண்டி துஆ செய்தவாறு கூறினார்கள்: ஒரு வேளை உங்கள் இருவருக்கும் நீண்ட ஆயுள் கிடைத்தது என்றால் உங்களுக்கு குதிரை, கோவேறு கழுதை மற்றும் ஒட்டகம் சவாரிகளாக கிடைப்பதை

பார்ப்பீர்கள். இப்பொழுது நீங்கள் மேற்கொண்ட இந்த பயணத்தை விட - இதில் நீங்கள் மிகவும் கஷ்டப்பட்டு நடந்து வந்துள்ளீர்கள், அது சிறந்ததாக இருக்காது. அதாவது உங்களுடைய இந்த பயணத்தின் நற்கூலி அந்த காலத்தின் சிறந்த நிஃமத்துகளை விட அதிகமாக இருக்கும். இந்த சம்பவம் ஃபஸாலாவின் மகன்களான ஹஸ்ரத் அனஸ் (ரலி) மற்றும் ஹஸ்ரத் மோனிஸ் (ரலி) ஆகியோருடன் நடந்ததாகும் என்றும் சொல்லப்படுகிறது. இந்த சம்பவம் இரண்டு பேருக்கும் நடந்திருக்கலாம்.

ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்துல்லாஹ் (ரலி) அறிவிக்கின்றார்கள்: இந்த போரின் போது எங்களுடைய அன்றாட பயண உணவு பேரிச்சம் பழங்களாக இருந்தன. ஹஸ்ரத் சஅத் பின் உபாதா (ரலி) அவர்கள் 30 ஒட்டகங்கள் மற்றும் பேரிச்சம் பழங்களை கொண்டு வந்தார்கள். அவை ஹம்ராஅல் அஸது வரை எங்களுக்கு போதுமானவையாக இருந்தன. சில சந்தர்ப்பங்களில் ஒட்டகங்களின் இறைச்சியும் உண்ணப்பட்டது. படை மிகப்பெரியதாக தென்பட்டு, எதிரிகள் அச்சமடைய வேண்டும் என்பதற்காக இரவின் நேரத்தில் அதிகமாக நெருப்பு மூட்டி வைத்தார்கள்.

இதற்கிடையில் மஅபத் பின் அபு மஅபத் கஸாயீ தொடர்பாகவும் குறிப்பு கிடைக்கின்றது. அவர் பெருமானார் (ஸல்) அவர்களை சந்தித்தார். மேலும் குறைஷிகளையும் இஸ்லாமிய படை தொடர்பாக பயமுறுத்தினார். இவர் அந்த தருணம் வரை இணை வைப்பவராக இருந்தார். அவர் அபூசுஃப்யான் அவர்கள் முன்பு இஸ்லாமிய படை தொடர்பாக மிகைப்படுத்தி எவ்வாறான தோற்றத்தை உருவாக்கினார் என்றால், அபூசுஃப்யான் மற்றும் அவர்களின் கூட்டாளிகள் உடைய தைரியம் சிதைந்து விட்டது. அவர்களிடம் நடுக்கமும் அச்சமும் ஏற்பட்டது. மேலும் எவ்வளவு விரைவாக தானும், தன்னுடைய படையும் மக்காவின் பக்கம் திரும்பி செல்கிறோமோ அதுவே பாதுகாப்பு என்று அபூசுஃப்யான் அவர்களுக்கு தோன்றியது. அபூசுஃப்யான் அவர்கள் புறப்பட்ட செய்தி கிடைத்ததன் பிறகு, பெருமானார் (ஸல்) அவர்கள் மூன்று நாட்கள் வரை அங்கு தங்கியிருந்தார்கள். பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் மதீனா திரும்பினார்கள். ஓர் அறிவிப்பின் அடிப்படையில் பெருமானார் (ஸல்) அவர்கள் ஐந்து நாட்கள் மதீனாவில் இருந்து வெளியே இருந்தார்கள்.

ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: பெருமானார் (ஸல்) அவர்கள் மதீனா திரும்பி வருவதற்கு முன்பு முஆவியா பின் முகைராவை கைது செய்து வைத்திருந்தார்கள். இவன் மதீனாவில் மறைந்திருந்தான். மேலும் மதீனாவின் சூழல் குறித்து எதிரிகளுக்கு செய்தி அனுப்பிக் கொண்டிருந்தான். எப்பொழுது அவன் பிடிப்பட்டானோ அப்பொழுது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களிடம் அடைக்கலம் வேண்டினான். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் விண்ணப்பம் வைத்ததன் அடிப்படையில், பெருமானார் (ஸல்) அவர்கள் அமைதி மற்றும் பாதுகாப்பு ஆகியவை வழங்கும்போது, மூன்று நாட்களுக்குள் இங்கிருந்து அவன் சென்று விட வேண்டும். ஒரு வேளை மூன்று நாட்களுக்குப் பிறகு தென்பட்டான் என்றால் அவன் கொல்லப்படுவான் என்று கூறினார்கள்.

ஆனால் இவன் மூன்று நாட்களுக்குப் பிறகும் அங்கேயே ஒளிந்து இருந்தான். எனவே, பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸைத் பின் ஹாரிஸா (ரலி) மற்றும் ஹஸ்ரத் அம்மார் பின் யாஸிர் (ரலி) ஆகியோரிடம், நீங்கள் இன்ன இடத்தில் அவன் ஒளிந்திருப்பதை பார்ப்பீர்கள் என்று கூறினார்கள். ஆகையால் அந்த இருவரும் அவனை அந்த இடத்திலேயே கண்டார்கள். அவனை கொலை செய்தார்கள்.

ஹம்ராஅல் அஸத் எனும் இடத்தில் பெருமானார் (ஸல்) அவர்கள் இணைவைப்பவர்களின் கவிஞரான அபூ உஸ்ஸாவையும் கைது செய்தார்கள். இவன்

இதற்கு முன்பும் பத்ர் போரின் நேரத்தில் முஸ்லிம்களுடைய கையால் கைது செய்யப்பட்டான். மேலும் தனது வறுமை மற்றும் தன் மகள்களை காரணம் கூறி தன் மீது கருணை காட்ட பெருமானார் (ஸல்) அவர்களிடம் விண்ணப்பம் வைத்தான். பெருமானார் (ஸல்) அவர்கள் அவனிடம் எந்த விதமான ஈட்டுத் தொகையும் பெறாமல் கருணையின் அடிப்படையில் அவனை விடுதலை செய்து விட்டார்கள். மேலும் எதிர்காலத்தில் அவன் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு எதிராக போருக்கு வர மாட்டான் என்றும், பெருமானார் (ஸல்) அவர்களுக்கு எதிராக படையினை திரட்ட மாட்டான் என்றும், பெருமானார் ஸல்) அவர்களுக்கு எதிராக எவரையும் தூண்ட மாட்டான் என்றும் வாக்குறுதி வாங்கினார்கள். ஆனால் அவன் தன்னுடைய உடன்படிக்கையை முறித்தான். மேலும் உஹுது போரின் பொழுது குறைஷிகளுடன் இணைந்து திரும்பி வந்தான்.

இவன் தன்னுடைய கவிதைகளின் மூலமாக எதிரிகளை தூண்டி விட்டு வந்தான். பெருமானார் (ஸல்) அவர்கள் இவன் இந்த முறை தப்பித்து செல்லக்கூடாது என துஆ செய்தார்கள். இந்த அடிப்படையில் இவன் மீண்டும் கைது செய்யப்பட்டான். அவன் திரும்பவும் தன்னை விடுதலை செய்யுமாறு பெருமானார் (ஸல்) அவர்களிடம் விண்ணப்பம் வைத்தான். ஆனாலும் பெருமானார் (ஸல்) அவர்கள் அவன் தலையை துண்டிக்குமாறு கட்டளையிட்டார்கள். பிறகு, பெருமானார் (ஸல்) அவர்கள், நம்பிக்கை கொண்டவர் ஒரு புற்றில் இரண்டு முறை கடிபட மாட்டார் என்று கூறினார்கள்.

மீதமுள்ளவை எதிர்வரும் காலங்களில் கூறப்படும் இன்ஷா அல்லாஹ்.

*இதற்கு பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* உலகத்தின் சூழலுக்காக துஆக்களை தொடர்ந்து செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வோர் அஹ்மதியையும் எல்லாவிதமான தீங்கிலிருந்தும் பாதுகாப்பானாக.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் குத்பாவின் இறுதியில், ரப்வாவை சார்ந்த மதிப்பிற்குரிய ஃபராஸ் அஹ்மத் தாஹிர் சாஹிப் ஷஹீது அவர்களின் நற்குறிப்பை கூறினார்கள். அவர்களை ஆஸ்திரேலியாவின் ஒரு வர்த்தக நிலையத்தில் வைத்து ஓர் ஆஸ்திரேலிய நபர் கத்தியால் தாக்கி ஷஹீது ஆகிவிட்டான். அவர்களுடைய புகழுக்குரிய பண்புகளை எடுத்துரைத்தார்கள். அல்லாஹ் அன்னாரின் தரஜாவை உயர்த்துவதற்காகவும், பின் விட்டுச் சென்றவர்கள் அனைவருக்கும் தைரியத்தை வழங்குவதற்காகவும் துஆ செய்தார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ

اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ

يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ

يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி M. ஷஹாபுத்தீன்)